


சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சேப்பாக்கம் திருவல்லிக்கேணி, ஆயிரம்விளக்கு, ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் பாகமுகவர்கள் (BLA2) கூட்டம் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு ஏற்பாட்டில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளரும், மண்டல தேர்தல் பொறுப்பாளர் ஆ.ராசா,எம்.பி. வரும் 2026ம் ஆண்டு நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் பணிகள் மற்றும் புதிய உறுப்பினர்களை கழகத்தில் சேர்ப்பது குறித்து விரிவாக பேசினார். உடன் தயாநிதி மாறன்,எம்.பி, சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர் வே.கௌதமன், பகுதி கழக செயலாளர்கள் மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், வட்டக் கழக செயலாளர்கள், பாகமுகவர்கள் (BLA2) என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி , இராயபுரம் கே.சி. சங்கரலிங்க நாடார் மேல்நிலைப்பள்ளி மகளிர் பிரிவு புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், ஆர்.கே.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜான் எபினேசர், இராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, இந்து நாடார்கள் அபிவிருத்தி தருமபண்டு தலைவர் எம்.எஸ்.எஸ்.சந்திரமோகன் மற்றும் பள்ளி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

### உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம்! கழகத்தில் மாற்றுத் திறனாளிகள் அணி அறிவித்த

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு "மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்பு குழு" சார்பில் நன்றி பாராட்டு விழா!

## தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவர் ரெ.தங்கம் அழைப்பு!

சென்னை, ஜூன். 20-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், முதலமைச்சராக பொறுப்பேற்ற கடந்த நான்கு ஆண்டு காலங்களில் மக்களின் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றி தந்ததுடன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டங்க ளை தொடர்ந்து அறிவித்து தந்தும், மாற்றுத்திறனாளிகளின் சிரிப்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை காணும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு "மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்பு குழு" சார்பில் சென்னையில் நன்றி பாராட்டு விழா நடைபெறுகிறது என தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத்தலைவர் ரெ.தங்கம் அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயலாக்கம் செய்து மாற்றுத்திறனாளிகளின் இதயங்களின் வாழ்ந்து கொண்டு வருகிறார் என்பதை மன மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன் .

மாற்றுத்திறனாளிகளுக்கு மேலும்,ஒரு வரலாற்று சிறப்பு மிக்க அம்சமாக மாற்றுத்திறனாளிகள் சமூகம் "உள்ளாட்சி அமைப்புகளில் நியமன முறையில் பிரதிநிதித்து வம்" வழங்கிட சட்டமன்றத்தில் சட்ட திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றியதுடன், மதுரையில் நடைபெற்ற வரலாற்று சிறப்புமிக்க பொதுக்குழு கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளின் கௌரவப்படுத்தும் விதமாக, எங்களின் நீண்ட நாள் கோரிக்கையான தி.மு. கழகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான தனி அணி அறிவித்த மாற்றுத்திறனாளிகளின் காவலர், தமிழ்நாடு முதலமைச்சர், மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நாளை 21.6.2025, சனிக்கிழமை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் "மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்பு குழு" சார்பில் மாபெரும் நன்றி பாராட்டு விழா நடைபெறுகிறது.

இம்மாநாட்டிற்கு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களில் இருந்து தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தினர் அனைவரும் குடும்பத்துடன் அலை கடலென திரண்டு வந்து, இந்தியாவில் உள்ள முதல்வர்களுக் கெல்லாம் வழிகாட்டு முதல்வராக திகழும், திராவிட மாடல் நாயகர்,தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்களுக்கு நன்றி தெரிவித்திட, நன்றி பாராட்டு விழாவில் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

### பரமத்திவேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதிகளில்

# ரூ.84.31 இலட்சம் மதிப்பீட்டில் 4 புதிய தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்கள்!

## அமைச்சர் மரு. மா.மதிவேந்தன் திறந்து வைத்தார்!

நாமக்கல், ஜூன் 20-

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர், திருச்செங்கோடு, குமார பாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.84.31 இலட்சம் மதிப்பீட்டில் 4 புதிய தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்கள் துவக்க விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர். ஈ. ஆர்.ஈஸ்வரன் முன்னிலை வகித்தார்.

விழாவில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு 4 புதிய தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்களை திறந்து வைத்து பேசினார். அப்போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு கடந்த 4 ஆண்டுகளில் அனைத்து தரப்பு மக்களுக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டுமென்ற உன்னத நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக விவசாய பெருமக்கள் பயன்பெறும் வகையில் பால் உற்பத்தியாளர்களின் நலன் காத்திட லிட்டருக்கு ரூ.3.00 வரை ஊக்கத்தொகை, கொழுப்பு நிறைந்த பாலுக்கு ரூ.1.00 கூடுதல் தொகை மற்றும் போனஸ் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

ஆவின் கால்நடைத் தீவனம் விற்பனை செய்யும் சங்க பணியாளர்களுக்கு 50 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூ.30/ ஊக்கத்தொகையாகவும், சங்கங்களுக்கு ஊக்கத்தொகையாகவும் வழங்கப்பட்டு வருகிறது. வருடந்தோறும் சங்கம் ஈட்டிய இலாபத்தில் பால் ஊற்றும் உறுப்பினர்களுக்கு 50% போனஸ், பங்கு ஈவு மற்றும் ஆதரவு தள்ளுபடி தொகை வழங்கப்படுகிறது. பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு 85% மானியத்தில் கால்நடை காப்பீட்டு வசதி செய்யப்பட்டு வருகிறது.

சங்கங்களில் பால் வழங்கி வரும் உறுப்பினர்களின் கறவை மாடுகளுக்கு வாராந்திர சிகிச்சை, அவசர கால சிகிச்சை மற்றும் மலட்டுத் தன்மை நீக்க சிகிச்சை ஆகிய மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதி திட்டத்தின் கீழ் சங்கத்தில் பால் வழங்கும் உறுப்பினர்களுக்கு மாதம் ரூ.10/ சந்தாவில் விபத்துக்களில் இறந்தால் விபத்து காப்பீடு, திருமண உதவி தொகை வழங்கப்பட்டு வருகிறது

4 புதிய தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்கள் மூலம் 76 சங்கங்களைச் சார்ந்த 1,816 உறுப்பினர்கள் பயன்பெறுவார்கள்.

இந்நிகழ்ச்சியில், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, அட்மா குழுத் தலைவர்கள் கு.பழனிவேல் (மல்லசமுத்திரம்), க.தங்வேல் (திருச்செங்கோடு), பொ.யுவராஜ் (பள்ளிபாளையம்), க.க.சண்முகம் (கபிலர்மலை), பொது மேலாளர் (ஆவின்) மரு.ஆர்.சண்முகம், துணைப் பதிவாளர் (பால்வளம்) ஐ.சண்முகநதி உட்பட துறைச்சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை கிழக்கு மாவட்ட பகுதிக் கழகச் செயலாளர்கள் - ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்ட பகுதிக் கழகச் செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டம் இன்று (20-06-25 வெள்ளிக்கிழமை) மாலை 7.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி,எண்.7, செல்லப்பா தெரு என்ற முகவரியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக உறுப்பினர் சேர்க்கை.

அமைச்சர் **பி.கே.சேகர்பாபு,**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனை அடுத்து முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களின் நினைவிடத்தில் சான்றிதழ் வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மலர் விழி, சந்திரமோகன், ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், மாணிக்கம், உமா சங்கர் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### 50 வழக்குகளுக்கு மேல் உள்ள

# மிளகாய் பொடி வெங்கடேசன் குண்டர் சட்டத்தில் கைது!

## காவல் துறை நடவடிக்கை!

சென்னை, ஜூன் 20 -

ஆவடி காவல் ஆணையகரத்திற்குட்பட்ட, செங்குன்றம் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளியான KR வெங்கடேசன் @ மிளகாய்ப்பொடி வெங்கடேசன் என்பவர் மீது, ஆவடி காவல் ஆணையகரத்தில் 05 வழக்குகளும், ஆந்திர மாநிலத்தில் 49 வழக்குகளும் உள்ள நிலையில், கடந்த 12.06.2025 அன்று, முகலிவாக்கம் குமுதம் நகரைச்சேர்ந்த தீபன் சக்கரவர்த்தி (41) என்பவர், தனக்கு கணபதிலால் என்பவர் தர வேண்டிய ரூ..87,82,586 திருப்பி தரமால் ஏமாற்றியதற்காகவும், அதனை பெற்றுத்தருவதாக கூறி கே.ஆர். வெங்கடேசன் @ மிளகாய்ப்பொடி வெங்கடேசன் தன்னை மிரட்டி ரூ,1 லட்சம் முன்பணமாக வாங்கியதாகவும், மேலும் 12 லட்சம் கேட்டு மிரட்டியதாக கொடுத்த புகாரின் அடிப்படையில் செங்குன்றம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து புலன்விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.

புலன் விசாரணையின் தொடர்ச்சியாக மேற்படி சம்பவத்தில் தொடர்புடைய கே.ஆர். வெங்கடேசன் @ மிளகாய்ப்பொடி வெங்கடேசன், கணபதிலால். மற்றும் கோகுல்வாசன் ஆகிய மூவரும் கடந்த 13.06.2025 அன்று கைது செய்யப்பட்டு பொன்னேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்,

கே.ஆர்.வெங்கடேசன் @ மிளகாய்ப்பொடி வெங்கடேசன் மீது தொடர்ந்து, மிரட்டி பணம் பறித்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் வந்த நிலையில் 17.06.2025 அன்று, குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் தலைமை!

# தி.மு.க. அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்!

## விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்! அப்துல் மாலிக் சிறப்புரை - ஆனந்த் வரவேற்புரை!

செஞ்சி ஜூன் 20-

தி.மு.க. அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் செஞ்சியில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டம் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது .

கூட்டத்திற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் உதயகுமார், எம்.டி. பாபு, அண்ணாமலை, விஜயகுமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு தலைமை உரை நிகழ்த்தினார். மாநில தி.மு.க. இளைஞரணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன்,செந்தமிழ் செல்வன் தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர் துரை, மணி மாறன், செழியன், நாராயண மூர்த்தி, இளம்வழுதி,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் செஞ்சி ஜம்போதி பழனி, சீனிவாசன், சுரேஷ் மேல்மலையனூர் மணிகண்டன், நிர்மல்ராஜ், ரங்கநாதன், வல்லம் தமிழ்வாணன், ராஜி, செந்தமிழ்ச் செல்வன்,மயிலம் சம்சுதீன், வெற்றிச்செல்வன், ரமேஷ், மரக்காணம் சத்தீஷ், ராஜசேகரன், சிவானந்தம், ஒலக்கூர் ஜெயபிரகாஷ், சண்முகம், திண்டிவனம் நகர அமைப்பாளர் சதீஷ், அனந்தபுரம் பேரூர் அமைப்பாளர் தயாளன் உள்ளிட்ட துணை அமைப்பாளர்கள், தி.மு.க. நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்டம்செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர், கழகங்களில் தெரு முனை பிரச்சாரக் கூட்டம் நடத்தி கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கவும்,அனைத்து கிளை மற்றும் வார்டுகளில் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமித்திடவும்,பாக இளைஞரணி நிர்வாகிகளுக்கு சமூக வலைதள பயிற்சி கூட்டம் நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மீஞ்சூர் மு. கேசவன்**
**ஜூன் 20 (2019)**



**கழகம் துவங்கிய காலத்திலேயே, கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பொன்னேரி வட்டத்தில் கழகத்தை துவங்கியவர்.**

**பொன்னேரி வட்டக் கழகச் செயலாளராக மூன்று முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற மும்முனைப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.**

**நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**